# Medical Services Recruitment Board

# மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்

## Instructions to candidates appearing for Computer Based Test (CBT)

## கணினி வழித் தேர்வுகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்

1. விண்ணப்பதாரர்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும். தேர்வு மையத்தினை மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

   The candidate has to appear for the examination where he/she has been allotted to the examination. Change of centre or venue is not permitted.

2. விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டினை தேர்வு மையத்திற்குக் கொண்டு சென்று காண்பிக்க வேண்டும். தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச் சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) வாக்காளர் அடையாள அட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் புகைப்பட அடையாள அட்டையினை அசலாக தேர்வு மையத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

   Candidates have to carry the Memorandum of Admission (Hall Ticket) and the same has to be produced at the examination venue. Candidates shall also bring with them,

   their Aadhaar card / Passport / Driving Licence / Permanent Account Number (PAN) card / Voter ID card or any other valid Photo ID card in original.

3. விண்ணப்பதாரரது நுழைவுச் சீட்டில், விண்ணப்பதாரரின் புகைப்படம் அச்சிடப்படாமலிருந்தாலோ அல்லது தெளிவாக இல்லாமலிருந்தாலோ அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லையென்றாலோ, தேர்வர் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளைக் காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண்ணைக் குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக் கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச் சீட்டு (Passport) /

ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலோப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

If the photograph of the candidate in the admission card (hall ticket) is not printed or not clear or does not match with candidate's appearance, he /she should furnish a separate photograph affixed on a plain paper, along with his / her name, address, register number and signature along with a copy of the Admission Card (hall ticket) and a copy of Aadhaar card/ passport/Driving Licence/Permanent Account Number (PAN) card / Voter ID card to the Chief Invigilator who shall endorse it.

4. தேர்விற்கான வருகைப் பதிவானது, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னதாகத் தொடங்கும். மேலும் விண்ணப்பதாரர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வுக் கூடத்திற்குள் கட்டாயம் இருக்க வேண்டும். அதன் பின்னர், வருகை புரியும் விண்ணப்பதாரர்கள் எவரும் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   The Registration for the examination shall start 90 minutes before the time scheduled for the commencement of the examination. Further, the candidates should present themselves at the examination venue 30 minutes before the time scheduled for the commencement of examination and no one shall be allowed into the venue thereafter.

5. விண்ணப்பதாரர்கள் மின்னணு மற்றும் தொழில்நுட்ப சாதனங்களைத் தேர்வு அறைக்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை. அதனால் மின்னணு சாதனங்களை எடுத்து வர வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

   Candidates are not permitted to carry any electronic and / or technical device into the examination hall. They are advised not to bring the electronic gadgets with them.

6. தேர்வெழுதும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒரு கணினி ஒதுக்கப்படும்.

Each candidate will be assigned a Computer to take up the examination.

7. கணினி வழித் தேர்விற்கு சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை. No computer knowledge is required to take up the Computer Based Test. Knowledge in Mouse operation would suffice to take up the Computer Based Test.

8. விண்ணப்பதாரர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியன தேர்வுக்கு முன் வழங்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை (login) செய்ய வேண்டும்.

   Candidates will be provided with an user name and password before the commencement of the exam to login the system.

9. பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றுக்கு மட்டும் விசைப் பலகையைப் பயன்படுத்தவும்.

   Use the keyboard only to key – in the User id (reg. id) and password.

10. திரையில் தோன்றும் அனைத்து அறிவுரைகளையும் கவனமாகப் படித்து தவறாது பின்பற்ற வேண்டும்.

    Necessary instructions will be displayed on the screen. Kindly read all the instructions carefully and follow the instructions without fail.

11. வினாக்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளில் இருக்கும். சில மருத்துவ / துணை மருத்துவப் பணியிடங்களுக்கான தேர்வுகளுக்கு அதற்கான அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி வினாக்கள் ஆங்கிலத்தில் மட்டும் இருக்கும்

    The questions will be bilingual in English and Tamil. For certain Medical / Paramedical posts, questions will be in English only, as specified in the Notification.

12. கணினி வழித் தேர்வு என்பது தாளின் மீது எழுதுகோல் கொண்டு விடையை நிரப்பும் தேர்வு போன்றதே.

    Computer Based online Test (CBT) is similar to paper pen shading test.

13. வினா விடைகளில் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினா விடைகளே இறுதியானது.

    In case of doubt in the questions and answers, English version is the final.

14. கணினி வழித் தேர்வில் ஒவ்வொரு வினாவும் நான்கு விடைகளுடன் திரையில் காட்டப்படும்.

In Computer Based Test, questions with four options each will be displayed in the computer screen.

15. ஒவ்வொரு விண்ணப்பதாரரின் திரையிலும், கேள்விகள் மற்றும் விடைகளின் வரிசை, மாற்றம் செய்யப்பட்டிருக்கும்.

The Question and optional answers will be shuffled randomly and displayed to the candidate.

16. விண்ணப்பதாரர் ஒவ்வொருவருக்கும், வழிமுறைகளுக்காக பயன்படுத்தும் பொருட்டு தனித்தாள் வழங்கப்படும். தேர்வு முடிவுற்ற பின் தனித்தாள் திரும்பப் பெறப்பட்டு விடும்.

Candidates will be provided with a paper for doing rough work. After closure of the examination, rough sheet will be collected.

17. விண்ணப்பதாரர்கள் வினாவிற்கு உரிய மிகச் சரியான விடையினை சொடுக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முன்புள்ள கேள்விக்கு செல்லலாம்.

Candidate has to click the best answer to the question. Candidates can proceed to the next question by clicking next button or previous question by clicking previous button.

18. விண்ணப்பதாரர்கள் சுட்டினைப் பயன்படுத்தி சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் வினாக்களுக்கு பதிலளிப்பதைத் தொடரலாம்.

Candidate can use only the mouse to select the correct answers and proceed with answering the questions.

19. விண்ணப்பதாரர்கள் எந்த ஒரு வினாவினையும் பார்வையிடலாம், தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எப்போது வேண்டுமானாலும் விடையினை மாற்றலாம். அவர்கள் விரும்பினால், சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்ல முடியும்.

Candidates can recheck his / her answers and if he / she feels to correct the answers, it can be done at any time before the closure

of examination. They can skip the questions also, if they desire so.

20. விண்ணப்பதாரர்கள் தேர்வு நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடைகளை சமர்ப்பிக்கலாம்.

Candidate can submit their answers at any time during the examination

21. விண்ணப்பதாரர் தேர்வினை முடிக்க விரும்பினால், அவர் தேர்வு நேரம் முடியும் வரை தனது இருக்கையிலேயே இருக்க வேண்டும்.

If he / she wants to close the examination, he / she shall remain in the seat till the completion of the scheduled time of examination.

22. விடைகளை சமர்ப்பித்த பின்னர், விண்ணப்பதாரர் மேலும் தேர்வினை தொடர வாய்ப்பில்லை.

Once the entire answers are submitted, the candidates have no option to proceed further.

23. விண்ணப்பதாரர்கள் தங்கள் விடையினை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேர்வு முடியும் நேரத்தில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

If the candidates fail to submit their answers, the system will automatically submit the answers to the server, at the closure of the examination.

24. பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளின் எழுத்து வடிவங்களை தேவைக்கேற்ப பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

The question and answers can be zoomed to the required level for the candidates with visual impairment.

25. விண்ணப்பதாரர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத் தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும்.

Candidates have to sign the attendance sheet and affix thumb impression for verification of his/her identity.

26. சுட்டியின் அனைத்து செயல்பாடுகளும் சேவையகத்தில் சேமிக்கப்பட்டு, பின்னாளில் பார்வையிடுவதற்கிணங்க, கோப்பு உருவாக்கப்படும்.

All the activities of the candidates with the mouse will be recorded

in the server and a log file will be created for future reference.

27. தேர்வறை கண்காணிப்புக் கருவி மூலம் கண்காணிக்கப்படும்.
The Examination Hall will be under camera surveillance.

28. இவ்வாரிய இணையதளம் (www.mrb.tn.gov.in) – ல் உள்ள மாதிரித் தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்து கொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணையத் தேர்வு போன்றது. மாதிரித் தேர்வில் படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் மாதிரித் தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளாலாம்.

To acquaint with the operation of Mouse and the CBT, the candidates can take up the mock test available in the Boards website (www.mrb.tn.gov.in) and they can practice the usage of mouse in the mock test. Mock test is similar to the CBT to be held on the day of examination. In the Mock test, all the steps are given similar to the CBT. Candidates can practice the mock test as many times as he/she likes.

II. <u>குற்றவியல் நடவடிக்கை (கொள்குறி வகைத் தேர்வுகளில் வாரியத்தின் அறிவுறுத்தல்களை மீறுவோருக்கான தண்டனை</u>

<u>Criminal Action (Penalty for violation of Board’s Instructions in the Objective type examination)</u>

1. **விண்ணப்பதாரர்கள் தேர்வு அறையில் மட்டுமன்றி, தேர்வு மைய வளாகத்திலும் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைபிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் விண்ணப்பதாரர், தேர்வுக்கூடத்தில் புகைபிடிக்கும் விண்ணப்பதாரர், வாக்குவாதத்தில் ஈடுபடும் விண்ணப்பதாரர் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற விண்ணப்பதாரருடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ தவறாக நடக்கும் விண்ணப்பதாரரின் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் வாரியம் தக்கதென கருதும் காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவர். மேலும், அவ்விண்ணப்பதாரர் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.**

   Candidates should maintain strict discipline not only in the examination room, but also inside the campus of the examination venue. Candidates found smoking / intoxicated, or found to have entered into a quarrel of any kind, or to have misbehaved with the Chief Invigilator or with the inspection authorities or with the invigilator or with any other candidate either in the examination hall or inside the campus of the examination venue, either before, during or after the examination, are liable to invalidation of answer sheet and debarment for any period the Commission may deem fit, as well as appropriate criminal action.

2. **ஆள்மாறாட்டம் மற்றும் தேர்வுக் கூடத்திற்குள் அல்லது வெளியே விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடும் பட்சத்தில், குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் வாரியத்தால் தக்கதென கருதப்படும் காலம் வரையில் தேர்வு எழுதுவதிலிருந்து விண்ணபதாரர் விலக்கி வைக்கப்படுவர்.**

   Indulging in any type of malpractice, including impersonation and resorting to unfair means within the examination hall or outside will lead to debarment for any period as deemed fit by the Board, besides initiation of criminal action.

III. <u>பிற அறிவுரைகள்</u>

<u>Other Instructions</u>

(i) தேவைப்பட்டால், தேர்வுக்கூடத்தில் காவல்துறையிலுள்ள ஆண் / பெண் காவலர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர்களால் தேர்வர்கள், முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

Candidates may be subjected to frisking at the examination venue, if required, with the assistance of male/female police personnel or any authorized persons, as the case may be.

(ii) சொந்த உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கான வசதி தேர்வு மையத்தில் இருக்கும். தேர்வு மையத்திலுள்ள பாதுகாப்பு அறை குறித்து தேர்வருக்குத் தெரிவிக்கப்படும். பாதுகாப்பு அறையினுள் வைக்கப்படும் அவர்களது உடைமைகளுக்கு டோக்கன் வழங்கப்படும். தேர்வு முடிவடைந்த பின்னர், டோக்கன் வழங்கிய அதிகாரியிடம், டோக்கனை திரும்பக் கொடுத்து, உடைமைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனினும், தேர்வு எழுதுவதற்குத் தேவைப்படாத பொருட்களைக் கொண்டு வர வேண்டாம் என தேர்வர் அறிவுறுத்தப்படுகிறார். பொருட்களின் பாதுகாப்பிற்கு முழுவதுமாக உத்திரவாதம் அளிக்க இயலாது. சொந்த உடைமைகளை பாதுகாப்பு அறையில் வைப்பது, தேர்வரின் சொந்த பொறுப்பிற்குட்பட்டதாகும்.

Facility for safe keeping of personal belongings will be available in the examination venue. Candidates shall be informed about the cloak room facility available in the examination venue. They shall be issued tokens against their belongings deposited in the cloak room. Upon completion of the examination, they shall collect their belongings by depositing the token back with the issuing authorities. However, the candidates are advised to bring no material other than the ones essential for the examination purpose. Safety of the material cannot be fully assured. Deposition of personal belongings in the cloak room shall be at the risk of the candidates.

(iii) தேர்வர்களுடன் வரும் பெற்றோர்கள் மற்றும் பிறர், தேர்வு நடைபெறும் மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

Parents and others who accompany the candidates will not be permitted inside the examination venue.

(iv) எதிர்பாராத நிகழ்வுகளில், தொற்று நோய் போன்ற காலங்களில்

பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள் / முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதாவது சானிடைசர் பயன்படுத்துவது, முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவைகளைக் கடைபிடிக்கவேண்டும்.

In case of extraordinary circumstances, like pandemic conditions, etc., the procedures / precautions prescribed (e.g., use of sanitizer and face mask, practising social distancing) shall be adhered to.

(v) விண்ணப்பதாரர் தேர்வுக்கூடத்தில் அறைக் கண்காணிப்பாளர் / தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் / அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் எவரும் அனுமதிச்சீட்டினை ஆய்வுக்காக கேட்கும்பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

Candidates must show the Memorandum of Admission (hall ticket) to the Invigilator / Chief Invigilator / inspection authorities / any authorized persons of the examination hall, on demand, for verification.

(vi) தேர்வர்கள், அனுமதிச்சீட்டினை தேர்வுக்கு முன்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு நகல் எடுத்து தங்கள் வசம் வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். **எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு அனுமதிச் சீட்டின் பிரதி வழங்கப்படமாட்டாது.**

The admission card (hall ticket) may also be photocopied, as a precaution, before the exam is over. **No duplicate of Memorandum of Admission (hall ticket) will be issued later.**

(vii) தேர்வுக்கூடத்திற்கு உள்ளே குடிநீர், தேநீர், காபி, சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது.

Water, tea, coffee, snacks, soft drinks, etc., will not be allowed inside the examination venue.

(viii) உடல் நலக்குறைவுடன் தேர்வு எழுதவரும் விண்ணப்பதாரர், தலைமைக் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று அவர்களுக்குத் தேவையான மருந்து மற்றும் மருந்து உபகரணங்களைக் கொண்டு வந்து, அறைக் கண்காணிப்பாளரின் மேஜையில் வைத்து தேவைப்படும்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

Candidates suffering from serious health issues, may, with the consent of the Chief Invigilator, deposit medication or other medical requirements on the room invigilator’s table for use, if needed.

(ix) தேர்வர்கள் தேர்வறையின் உள்ளே நுழைந்த முதல் 15

நிமிடங்கள், Biometric விவரங்களைக் கொண்டு தேர்வரின் அடையாளத்தினை உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படும். தேர்வர்களின் Biometric விவரங்கள் தேர்வாணையத்தால் அத்தேர்வு மையத்திற்கு நியமிக்கப்பட்ட தொழில் நுட்பப்பணியாளர்களால் சரிபார்க்கப்படும்.

The first fifteen minutes after the entry of candidates into the examination room shall be used exclusively for biometric authentication. The biometric details of the candidates shall be verified by the technical personnel deputed by the office of the Commission to the examination venue.

(x) பொதுவான விண்ணப்பதாரர்கள் தமிழ் தகுதித் தேர்வு மற்றும் பாடத்தாள் தேர்வு ஆகிய இரு தேர்வுகளுக்கும் வருகை புரிந்திருக்க வேண்டும்.
General Candidate should appear for both the papers Compulsory Tamil Eligibility Test and the Subject Paper.

(xi) தேர்வுக் கூடத்தில் விண்ணப்பதாரர் வினாக்களுக்கான விடைகள் தொடர்பாக அறை கண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல், தேர்வரின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வரை தகுதி நீக்கம் செய்வதற்கும் வழி வகுக்கும்.

Seeking the help / assistance of any official / hall supervisor in answering questions in examination hall will lead to invalidation and debarment of the candidate.

(xii) தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேல், எக்காரணத்தைக் கொண்டும் அதிகப்படியான நேரம் எடுத்துக் கொள்ள விண்ணப்பதாரர் அனுமதிக்கப்பட மாட்டார்.
Candidates shall not be allowed to exceed the time allotted for answering the paper, for any reason.

(xiii) உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் இவ்வாரிய இணையதளத்தில் வெளியிடப்படும். வாரியத்தால் வெளியிடப்படும் உத்தேச விடைகள் தொடர்பாக, இணையதளத்தில் வெளியிடப்படும் Objection Tracker என்ற சாளரத்தைப் பயன்படுத்திமுறையீடு செய்யலாம் [Tentative Answer Key → Objection Tracker].

Tentative answer keys will be hosted in the Board’s website in Five working days from the date of conduct of examination. Candidates can challenge the tentative answer keys of the examination through the ‘Objection Tracker’ window available in

the Board’s website [Tentative Answer Key → Objection Tracker].

(xiv) உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு ஏதுமிருப்பின் விண்ணப்பதாரர், உத்தேச விடைகள் இவ்வாரியத்தால் வெளியிடப்பட்ட 5 நாட்களுக்குள், இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்ய வேண்டும். அஞ்சல் வாயிலாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

Representations, if any, challenging the tentative answer keys shall be submitted only through online mode within 5 days from the date of publication of tentative answer keys. Representations received by post or e-mail will receive no attention.

(xv) இணைய வழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது, ஒவ்வொரு பாடத்திற்கான வல்லுநர்களைக் கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு அதன் பின்னர் தமிழ் மொழித் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு மட்டுமே தரவரிசைப் பட்டியல் தயார் செய்யும் பணியானது தொடங்கப்படும் .

The challenges submitted on time, through the online mode, shall be referred to a Expert committee comprising of experts in each subject. The decision on the final answer key shall be made, based on the recommendations of the expert committee and preparation of Merit List shall commence thereafter only for the candidates who cleared the Tamil Eligibility Test.

## Important Instructions for Objective Type Examinations in CBT

## கொள்குறி வகைத் தேர்வுகளுக்கான முக்கிய விதிமுறைகள்-

a. ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.
One question will be displayed on the screen at a time.

b. தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை Time Left: என காண்பிக்கும். தமிழ் தகுதித் தேர்விற்கான கால அளவு 1 மணி நேரம், எனவே தமிழ் தகுதித் தேர்வின் தொடக்கத்தில் timer 60 நிமிடங்களைக் காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும். Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும். மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு அரசாணை (நிலை.) எண்.49, மனிதவள மேலாண்மை(எம்)த் துறை நாள்:23.05.2022 – ன் படி கட்டாய தமிழ் தகுதித் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

15 நிமிட ஆயத்தகாலத்திற்குப் பின்னர், பாடத்தாள் தேர்விற்கான கால அளவு 2 மணி நேரம். எனவே பாடத்தாள் தேர்வின் தொடக்கத்தில் timer 120 நிமிடங்களைக் காண்பிக்கும் மற்றும் தகுதியான மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு அரசாணை எண். (நிலை). 8, மாற்றுத்திறனாளிகள் நல (டி.ஏ.பி – 3.2) துறை நாள்: 21.09.2022 – ன் படி, 160 நிமிடங்கள் என காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும்). Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display the remaining time as **Time Left.** For Tamil Eligibility Test, duration of examination is 1 hour, at the beginning of exam, timer will show 60 minutes which will reduce gradually with passage of time. When the timer reaches zero, the examination will end by itself and your examination will be submitted by the system automatically. The Differently Abled candidates are exempted from writing the Compulsory Tamil

Eligibility Test as per G.O.(MS).No.49, Human Resources Management (M) Department Dated: 23.05.2022.

After 15 minutes for readiness, For Subject Paper Test, duration of examination is 2 hours, at the beginning of exam, timer will show 120 minutes and for Differently Abled candidates the timer will show 160 minutes as per G.O.(Ms).No.08, Welfare of Differently Abled Persons (DAP – 3.2) Department Dated: 21.09.2021 which will reduce gradually with passage of time. When the timer reaches zero, the examination will end by itself and your examination will be submitted by the system automatically.

**c. கேள்வி எண் பெட்டி:**

1. **திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையயும் காண்பிக்கும்**




**'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன.**

**C. Question Number Box:**

1. Question Number Box displayed on the right side of the screen will show the status of each question using one of the following symbols:




The ‘Marked for Review’ status for a question simply indicates that you would like to look at that question again.

2. கேள்வி எண் பெட்டியில் இடது பக்கத்தில் தோன்றும் " > " அம்புக்குறியைக் கிளிக் செய்வதின் மூலம் கேள்வி எண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்வி எண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால் திரையின் வலதுபுறம் உள்ள " < " அம்புக்குறி மீது கிளிக் செய்யவும். உங்கள் கேள்விப் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ ஸ்க்ரோல் செய்யாமலேயே பார்க்க விரும்பினால்  மற்றும்  ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

You can click on the **">"** arrow which appears to the left of question number box to minimize the question number box. This will enable you to view the question on a bigger area of the screen. To view the question number box again, you can click on **"<"** arrow which appears on the right side of the screen.

You can click on  to navigate to the bottom and  to navigate to the top of the question area, without scrolling.

3. பதிலளிக்கப்பட்ட வினாக்கள், பதிலளிக்கப்படாத வினாக்கள், பார்க்கப்படாத வினாக்கள், சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை மற்றும் பதிலளிக்கப்பட்டு மீண்டும் ஒருமுறை சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை ஆகிய அனைத்தும் தொகுக்கப்பட்டு கேள்வி எண் பெட்டியின் மேலே காட்டப்படும்.

The summary of number of questions answered, not answered, not visited, marked for review and answered and marked for review will be displayed above the question number box.

**d. கேள்விக்கு விடையளிக்கும் முறை**
**Answering a Question**

1. **வினாக்களானது ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித் திரையில் தோன்றும். அதற்கு ஒன்றன் பின் ஒன்றாக விடையளிக்கவும்.**

The questions will appear on the screen in ascending order, which can be answered one by one.

2. **ஒரு வினாவிற்கான விடையைத் தேர்வு செய்ய அதற்கென அளிக்கப்பட்டுள்ள விடைத் தெரிவுகளில் ஒன்றின் மீது கிளிக் செய்யவும்.**

To select your answer of a question, click on the button of one of the options.

3. **ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்த பின் உங்கள் விடையை சேமிக்க Save மற்றும் Next பட்டன் மீது கிளிக் செய்யவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்பட மாட்டாது.**

**Click on Save and Next button after answering every question to save your answer.** Otherwise your answer will not be saved.

4. நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்க வேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பட்டனை கிளிக் செய்யவும் அல்லது Clear Response பட்டன் மீது கிளிக் செய்யவும்.

To deselect your chosen answer, click on the button of the chosen option again or click on the **Clear Response** button.

e) படங்களைப் பெரிதாக்குவதற்கான அறிவுறுத்தல்கள்:

**Instruction for enlarging images**

வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது கிளிக் செய்து மவுசில் உள்ள ஸ்க்ரோலிங் வீலை சுழற்றவும்.

To view the image provided in the question in a bigger size, click on the image and rotate the scrolling wheel on the mouse.

**விண்ணப்பதாரர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், வாரியம் எடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.**

Any attempt of malpractice found, will render you liable to such penal action as the Board may decide.

**உறுப்பினர் செயலர்**